தேனி மாவட்டம்

தனியார் பள்ளி வாகனங்களை கூட்டாய்வு செய்யும் சிறப்பு முகாம்!

மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்!

தேனி, மே 11-

தேனி மாவட்டம், ஆயுதப்படை மைதானத்தில் தேனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட தனியார் பள்ளிகளின் வாகனங்களை ஆய்வு செய்யும் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா, முன்னிலையில் நேற்று (09.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தேனி மாவட்ட நிர்வாகம், காவல்துறை, பள்ளிக் கல்வித்துறை,தீயணைப்புத் துறை, வட்டார போக்குவரத்து அலுவலகம் இணைந்து தேனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட (தேனி, பெரியகுளம், ஆண்டிபட்டி வட்டம்) 47 பள்ளிகளில் உள்ள

380 வாகனங்களில் 297 பள்ளி வாகனங்களைக் கூட்டாய்வு செய்யும் பணிகள் நேற்று நடைபெற்றது.

இவ்வாய்வின்போது, பள்ளி வாகனத்தில் அவசர கால வழி (EMERGENCYEXIT DOOR), முதலுதவிப்பெட்டி, ஏறி இறங்கும் படிக்கட்டுகள், தீயணைப்பான் கருவி, வாகனத்தின் தரை பலகை (PLOT FORM), கண்காணிப்புக் கேமரா உள்புறம் மற்றும் வெளிப்புறம், அவசர கால தொலைப்பேசி எண்கள் ஆகியன முறையாக உள்ளதா என்றும் மேலும், வேக கட்டுப்பாட்டுக்கருவி வாகனத்தின் பிரேக்கின் திறன் போன்றவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பள்ளி வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஆண்டுக்கு ஒருமுறை பள்ளி மாணவர்களை அழைத்து செல்லும் வாகனங்களை கூட்டாய்வு மூலம் ஆய்வு செய்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டதன் அடிப்படையில், இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி வாகன ஓட்டுநர்கள் சீருடை அணிந்திருக்க வேண்டும். பள்ளிவாகனத்தில் ஒரு உதவியாளர் இருக்க வேண்டும். வாகனத்தின் பின்புறம் பள்ளி நிர்வாகத்தின் தொலைப்பேசி எண், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் தொலைப்பேசி எண், காவல் நிலைய தொலைப்பேசி எண், குழந்தைகள் பாதுகாப்பு எண் உள்ளிட்டவை நன்றாக தெரியும் வகையில் எழுதப்பட வேண்டும். வாகனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து மீண்டும ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஒரு வாகனத்தின் திறன் எவ்வாறு முழுமையாக உள்ளதோ அதேபோன்று வாகன ஓட்டுநர்களும் முழுமையான உடல் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். அதன்படி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை சார்பில் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், கண் பரிசோதனை மேற்கொண்டு, மருத்துவரின் அறிவுரையை பின்பற்றி முறையாக மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும். முறையாக மருத்துவ பரிசோதனைகளை தொடர்ந்து மேற்கொண்டு, உடலை பேணிப் பாதுகாத்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு அரசு விதித்துள்ள வழிமுறைகளையும், சாலைப் பாதுகாப்பு விதிகளையும், முறையாக பின்பற்றி வாகனங்களை இயக்க வேண்டும். பள்ளி மாணவர்களை ஏற்றி செல்வதால் வாகனங்கள் இயக்குவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று ஆய்வுக்கு வராத வாகனங்களை பள்ளி திறப்பதற்கு முன்பாக, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இன்றையதினம் ஆய்வு செய்யப்பட்ட 297 வாகனங்களில் சிறுசிறு குறைபாடுகள் கொண்ட 18 வாகனங்கள் கண்டறியப்பட்டு, குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்த அறிவுறுத்தப்பட்டது. 279 வாகனங்கள் தகுதியானவையாக கருதப்பட்டு தொடர்ந்து பள்ளி குழந்தைகளை ஏற்றி இறக்க அனுமதிக்கப்பட்டது. மீதமுள்ள வாகனங்களும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பள்ளி குழந்தைகளை ஏற்றி இறக்க அனுமதிக்கப்படும்.

மேலும், உத்தமபாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குட்பட்ட (உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் வட்டம்) 287 பள்ளி வாகனங்கள் வருகின்ற

14.05.2026 அன்று கூட்டாய்வு செய்யும் பணிகள் நடைபெற உள்ளது.

இவ்வாய்வில், பெரியகுளம் சார் ஆட்சியர் திரு. ரஜத்பீடன், இ.ஆ.ப., வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.மாணிக்கம், முதன்மைக் கல்வி அலுவலர் திரு.நாகேந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. சுந்தர் ராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆபரேஷன் சிந்தூரின் போது பாகிஸ்தானுக்கு உதவி செய்தோம்!

முதல் முறை ஒப்பு கொண்டுள்ள சீனா!

பெய்ஜிங், மே 11-

கடந்த ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்ற ராணுவ ரீதியிலான மோதலின் (ஆபரேஷன் சிந்தூரின்) போது, பாகிஸ்தானுக்கு நேரடியாக தொழில் நுட்ப உதவியை வழங்கியதாக சீனா முதன்முறையாக ஒப்பு கொண்டுள்ளது.

கடந்த 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் தேதி, ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 26 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மோதல்கள் தீவிரமடைந்தன. இந்நிலையில் சவுத் சீனா மார்னிங் போஸ்ட் வெளியிட்ட ஓர் அறிக்கையில் இது குறித்த தகவல் வெளியாகியுள்ளது. சீனாவின் மேம்பட்ட போர் விமானங்கள் மற்றும் ஆளில்லா வான்வழி விமானங்களின் வடிவமைப்பில் முக்கியப் பங்காற்றும், சீ'ன விமானத் தொழில் கழகத்தின் விமான வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த பொறியாளர் ஜாங் ஹெங் என்பவருடனான நேர்காணலை, அந்நாட்டின் அரசு ஒளிபரப்பு நிறுவனம் ஒளிபரப்பியதாக 'சவுத் சீனா மார்னிங் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

AVICன் 'CHENGDU AIRCRAFT DESIGN AND RESEARCH INSTITUTE'ஐ சேர்ந்த பொறியாளர் ஜாங் ஹெங், பாகிஸ்தானுக்குத் தொழில்நுட்ப உதவி வழங்கிய குழுவில் தானும் ஒருவராக இருந்ததாக கூறி இருக்கிறார். சீனாவின் நவீனப் போர் விமானங்கள் மற்றும் ஆளில்லா விமானங்களை (ட்ரோன்கள்) உருவாக்குவதில் இந்நிறுவனம் புகழ் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜாங் தனது பேட்டியில் கூறியதாவது: "எங்கள் தளத்தில் இருந்த போது, போர் விமானங்கள் புறப்படும் சத்தம், வான்வழித் தாக்குதல் எச்சரிக்கைச் சைரன்களின் இடைவிடாத அலறலை நாங்கள் அடிக்கடி கேட்டோம். கடந்த மே மாதத்தில், காலைப் பொழுதின் பிற்பகுதியிலேயே வெப்பநிலை 50 டிகிரி செல்சியஸை எட்டியது. இது எங்களுக்கு உடல் மற்றும் மனதளவில் ஒரு உண்மையான கடும் சோதனையாக இருந்தது. சீன தரப்பில் இருந்து பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முழுத் திறனுடன் செயல்படுவதை உறுதி செய்வதே எங்கள் குழுவிற்கான பணியாக இருந்தது என்று கூறியுள்ளார்.

இதனிடையே கடந்த ஆண்டு பாகிஸ்தானின் ராணுவத் தளவாடங்களில் 81 சதவீதம் சீனத் தயாரிப்புகள் என்றும், சீனா தனது ஆயுதங்களுக்கான ஒரு "நேரடிப் பரிசோதனைக் களமாக" பாகிஸ்தானைப் பயன்படுத்தி வருவதாகவும் இந்திய ராணுவம் தகவல் தெரிவித்திருந்தது. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) தரவுகளின்படி, 2015ஆம் ஆண்டிலிருந்து சீனா பாகிஸ்தானுக்கு 8.2 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது. மேலும் 2020 முதல் 2024 வரையில் உலகின் நான்காவது மிகப்பெரிய ஆயுத ஏற்றுமதி நாடாக சீனா இருந்தது, இந்த காலகட்டத்தில் அதன் மொத்த ஆயுத ஏற்றுமதியில் 63 சதவீதம் பாகிஸ்தானுக்கு இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆபரேஷன் சிந்தூரின் போது மொத்தம் மூன்று எதிரிகளை எதிர்கொண்டதாக இந்தியா கூறி இருந்தது. இதில் பாகிஸ்தான் நேரடி எதிரி என்றாலும் அதற்கு ஆயுதங்கள் வழங்கி ஆதரவளித்தது சீனாவும், துருக்கியும் என்று ராணுவத் துணை தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ராகுல் ஆர். சிங் கடந்த ஜூலை 2025ல் கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிவு!

ஈரோடு, மே 11 -

ஈரோடு, கரூர், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், 2.47 லட்சம் விளை நிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது. பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது.

கடந்த சில நாட்களாக பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து குறைந்து வருகிறது அதேநேரம் பாசனத்துக்கு நீர்வரத்தை விட அதிக அளவில் தொடர்ந்து நீர் வெளியேற்றப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 60.25 அடியாக சரிந்துள்ளது. நேற்று காலை அணைக்கு 69 கன அடியாக நீர்வரத்து வந்து கொண்டிருந்தது. பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது. தடப்பள்ளி அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 400 கன அடியும் பவானி ஆற்றுக்கு 100 கன அடி நீர் என மொத்தம் பாசனத்திற்காக 500 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 26.59 அடியாக உள்ளது. பெரும் பள்ளம் அணையின் நீர் மட்டம் நேற்று காலை நிலவரப்படி 23.88 அடியாக சரிந்துள்ளது. இதே போல் வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 19.29 அடியாக சரிந்துள்ளது.

ஈரோடு மாவட்ட அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் மழைப் பொழிவு இல்லாததால் தொடர்ந்து அணைகளின் நீர்மட்டம் சரிந்து வருவது விவசாயிகளை கவலை அடைய செய்துள்ளது.

பா.ஜ.க. ஆட்சிக்குப் பிறகு பேரவைகளில் குறைந்த முஸ்லிம் எம்.எல்.ஏ.க்கள்!

புதுடெல்லி, மே 11 -

கடந்த 2014ம் ஆண்டு மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு செல்வாக்கை அதிகரித்து வருகிறது. அதை சமாளிக்க முடியாமல், தேர்தலின் போது வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் போது எதிர்க்கட்சிகள் வேறுவகையான மாற்றங்களைச் செய்து வருகிறது.

குறிப்பாக மாநில சட்டப்பேரவைகளில் முஸ்லிம் எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை 2013ம் ஆண்டு 339 ஆக இருந்தது. தற்போது அது 282 ஆக குறைந்துள்ளது.

உத்தர பிரதேசத்தில் சுமார் 25 சதவீத முஸ்லிம்கள் உள்ள சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்கள் 403. ஆனால், தற்போது 31 முஸ்லிம் எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே உள்ளனர். இதற்கு முன் உ.பி.யில் 63 முஸ்லிம் எம்.எல்.ஏ.க்கள் இருந்துள்ளனர். இதேபோல் பிஹாரில் 19ல் இருந்து 11, ராஜஸ்தானில் 11ல் இருந்து 6 ஆக முஸ்லிம் எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அசாம், மேற்கு வங்க மாநிலங்களில் 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் முறையே 8 மற்றும் 9 முஸ்லிம் வேட்பாளர்களை பா.ஜ.க. நிறுத்தியது. ஆனால், அசாமில், அனைத்து முஸ்லிம் வேட்பாளர்களும் தோல்வியடைந்தனர். அதன்பின் கட்சியில் சிறுபான்மையினர் பிரிவையே பா.ஜ.க. கலைத்து விட்டது. இந்த முறை 2 மாநிலங்களிலும் ஆட்சி அமைத்த பா.ஜ.க. ஒரு முஸ்லிம் வேட்பாளரைக் கூட நிறுத்தவில்லை.

தேசிய அளவில் மணிப்பூரைச் சேர்ந்த அச்சப் உத்தின் மற்றும் திரிபுராவைச் சேர்ந்த தபஸ்ஸுல் ஹுசைன் ஆகிய 2 பேர் மட்டுமே பா.ஜ.க.வில் முஸ்லிம் எம்.எல்.ஏ.க்களாக உள்ளனர். முஸ்லிம் எண்ணிக்கைக்கும் மாநில சட்டப்பேரவைகளில் அதன் உறுப்பினர்களுக்குமான இடைவெளி மிகவும் அதிகமாக உள்ளது. மேற்கு வங்க மாநிலத்தில் சுமார் 30 சதவீதம் இருந்தும் சட்டப்பேரவையில் 12.6 சதவீத முஸ்லிம்கள் மட்டுமே உள்ளனர்.

பிஹாரில் 17 சதவீத முஸ்லிம்கள் இருந்தும் பேரவையில் 4.5 சதவீதம் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் முஸ்லிம்கள் 10 சதவீதத்துக்கும் அதிகமானோர் உள்ளனர். ஆனால், சட்டப்பேரவைகளில் 3 முதல் 4 சதவீதம் மட்டுமே உள்ளனர்.

தேசிய அளவில் அதிக பட்சமாக சட்டப்பேரவைகளில் 61 முஸ்லிம் எம்எல்ஏ.க்களுடன் காங்கிரஸ் முதலிடம் வகிக்கிறது. இரண்டாவது இடத்தில் ஜம்முகாஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியில் 39 பேர் உள்ளனர். அடுத்தடுத்த நிலையில், திரிணமூல் காங்கிரஸ் 37 மற்றும் சமாஜ்வாதி 34 உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. கேரளாவில் மட்டும் வலுவான நிலையில் 26.56 சதவீத முஸ்லிம்களில் 25 சதவீதம் பேர் வென்றுள்ளனர். இவர்கள் ஆளும் காங்கிரஸ் 8, ஐயுஎம்எல் 22 எனவும், எதிர்க்கட்சி கூட்டணியில் சி.பி.எம். 4 மற்றும் சி.பி.ஐ. 1 என முஸ்லிம்கள் இடம் பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் தி.மு.க. 3, ஐயுஎம்எல் 2, த.வெ.க. மற்றும் காங்கிரஸ் தலா 1 முஸ்லிம்களை வைத்துள்ளன. புதுச்சேரியில் 6.05 சதவீத முஸ்லிம்கள் இருந்தும் அவர்களில் ஒருவர் கூட இடம்பெறவில்லை. மேற்கு வங்க மாநிலத்தில் 59 என்றிருந்த இவர்களின் எண்ணிக்கை தற்போது முடிந்த தேர்தலில் 37 எனக் குறைந்துள்ளது.

எனினும், இது பா.ஜ.க.வால் மட்டும் நிகழும் மாற்றமல்ல. நாடு முழுவதும் உள்ள அனைத்துக் கட்சிகளிலும் இதே நிலைமை தொடர்கிறது. பல மாநிலங்களில், சில கட்சிகள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்தி, மிகப் பெரிய தேர்தல் வெற்றிகளைப் பெற்றுள்ளன. இச்சூழல், எதிர்க்கட்சிகளைச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை சமூகக் கட்டமைப்புகளுடன் சமநிலைப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளியுள்ளது.

5 மாநில சட்டமன்றத் தேர்தல்:

ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்கள் அதிக வாக்குப்பதிவு!

புதுடெல்லி, மே 11 -

பல மாநிலங்களில் நடந்த தேர்தலில் பெரும அளவு வாக்குபதிவானது. ஆண்களை விட பெண்கள் அதிகம் வாக்களித்தனர் என்பது தேர்தல் ஆணைய தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது. சமீபத்தில் கேரளம்,தமிழ்நாடு, மேற்கு வங்கம் உள்ளிட்ட 5 மாநில சட்டமன்றங்களுக்கு தேர்தல் நடந்தது. இதில்,293 தொகுதிகளை மேற்கு வங்க சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தலில் அதிகபட்சமாக 93.71 % வாக்குகள் பதிவானது. இந்த மாநிலத்தில் மொத்தம் 6.81 கோடி வாக்காளர்களில் 6.38 கோடிக்கும் அதிகமானோர் வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

மேற்கு வங்கத் தேர்தலில் பெண் வாக்காளர்களின் வாக்கு 93.8 % பதிவாகியுள்ளது. இது ஆண்களின் 92.06 % விட சற்று அதிகமாகும்.

தமிழ்நாட்டில் 5.74 கோடி வாக்காளர்களில் கிட்டத்தட்ட 4.8 கோடி வாக்குகள் (85.01 %) பதிவாகியுள்ளது. 85.01 % வாக்குப்பதிவு பதிவாகியுள்ளது. ஆண்களில் 83.77 % வாக்குப்பதிவாகியுள்ளது. பெண் வாக்காளர்கள் 86.2 % என அதிகமாக பதிவாகியுள்ளது. அசாமிலும் ஏராளமானோர் வாக்களித்தனர். இறுதி வாக்குப்பதிவு 85.74 % எட்டியது. மாநிலத்தில் 2.15 கோடிக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகின. பெண் வாக்காளர்கள் 86.53 % வாக்களித்தனர். இது ஆண் வாக்காளர்களிடையே பதிவான 84.95 % விட சற்றே அதிகம்.

கேரளாவில் 78.11 % வாக்குப்பதிவு பதிவானது. அங்கு 2.12 கோடிக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகின. பெண் வாக்காளர்களின் பங்கேற்பு 81.17 %, ஆண்களின் பங்கேற்பு 74.9% வும் இருந்தது. புதுச்சேரியில் 89.82 % வாக்குப்பதிவு பதிவானது. யூனியன் பிரதேசத்தில் 8.5 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாகின. இங்கும் பெண் வாக்காளர்களின் பங்கேற்பு அதிகளவான 91.39 % ஆக இருந்தது.

இந்தியக் கடற்படையின் புதிய தளபதி நியமனம்!

புதுடெல்லி, மே 11 -

இந்தியக் கடற்படையின் அடுத்த தலைமைத் தளபதியாக வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமி நாதன் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது மும்பையில் உள்ள மேற்கு கடற்படை கமாண்டின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றி வரும் இவர், மே 31ஆம் தேதி முறைப்படி இப்பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.

தற்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி மே 30ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து, அந்த இடத்திற்கு கிருஷ்ணா சுவாமி நாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பதவிக் காலம் டிசம்பர் 31, 2028 வரை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியக் கடற்படையில் இவர் ஆற்றிய சிறப்பான மற்றும் நீண்டகால சேவையைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு இவருக்கு இந்த உயரிய பொறுப்பை வழங்கியுள்ளது.

இத்துடன் நாட்டின் ராணுவக் கட்டமைப்பில் மற்றொரு முக்கிய மாற்றமாக, லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்ரமணி (ஓய்வு) புதிய பாதுகாப்புப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ராணுவ விவகாரங்கள் துறையின் செயலாளராகவும் செயல்படுவார்.

தற்போதைய பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான் வரும் மே 30, 2026 அன்று தனது பதவிக்காலத்தை நிறைவு செய்ய உள்ளார். 11வது கோர்க்கா ரைபிள்ஸ் பிரிவைச் சேர்ந்த அனில் சவுகான், செப்டம்பர் 30, 2022 முதல் நாட்டின் இரண்டாவது சி.டி.எஸ்ஆகப் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகள், பெரியவர்களை கவர்ந்த ஊட்டி கண்காட்சி!

ஊட்டி, மே.11-

ஆண்டுதோறும் கோடை சீசனின்போது, தென்னிந்திய கென்னல் கிளப் சார்பில் ஊட்டியில் நாய்கள் கண்காட்சி நடத்தப்படுகிறது. அதன்படி, நடப்பாண்டு 138 மற்றும் 139வது நாய்கள் கண்காட்சி ஊட்டி அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. தினமும் நாய்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் ஹோண்டு, லேப்ரடார், ஜெர்மர் ஷெப்பர்டு, டாஸ்ஹவுண்ட், கோல்டன் ரீட்டிவர், கிரேட் டேன், பீகிள், பார்டர் கோலி, மினியேச்சர் பின்சர், பஷ்மி ஹோவுண்ட், பிளாக் ஜெர்மன் ஷெப்பர்டு, பக், டாபர்மேன் ஆகிய நாய்கள் பங்கேற்றுள்ளன. இந்தாண்டு வெல்ஷ் கார்கி மற்றும் ஷப்பர்க்கி ஆகிய புதிய இன நாய்கள் பங்கேற்றன.

பீகிள், டாஷ்சண்டு, நாட்டு ரக நாய்களான ராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி ஆகிய இந்திய ரக நாய்களின் சிறப்பு கண்காட்சி நேற்று நடந்தது. நாய் கண்காட்சியில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தங்கள் செல்லப் பிராணிகளுடன் உற்சாகமாக கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்கள் செல்லப்பிராணிகளின் திறமைகளை வெளிப்படுத்தினர். கண்காட்சியின் இறுதி நாளான இன்று, போட்டியில் பங்கேற்ற நாய்களில் ஒன்றுக்கு 'ஆண்டின் சிறந்த நாய்' விருது வழங்கப்படும்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, பாலக்கோடு ஒன்றியத்திற்கு உட்பட்ட கரகதஅள்ளி, எர்ரனஅள்ளி, பேலாரஅள்ளி, பி.செட்டிஅள்ளி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட தி.மு.க வேட்பாளர் டாக்டர்.டிஎன்வி.எஸ்.செந்தில்குமார், உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு தந்து வாக்களித்த கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் டி.அரியப்பன், பாலக்கோடு தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆனந்தன், காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எம்.வி.டி.கோபால், மாவட்ட இளைஞரணி து.அமைப்பாளர் பி.என்.சி. மகேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் குட்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் துணைத் தேர்வு எழுதவுள்ள மாணவமாணவியர்களுக்கு ஊக்கமளிக்கும் விழிப்புணர்வுக் கூட்டம் நேற்று (09.05.2026) நடைபெற்றது.